**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.254/2025**

**நாள் : 07.02.2026**

**ம.சா.** 1 செல்வி

**1-ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாணை :**

விபத்தில் இறந்தவர் எனது கணவர். எனது மனுவில் விபத்து நடந்த இடம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நாட்றம்பள்ளி – புதுப்பேட்டை ரோட்டில் தோழர் கவுண்டர் தெருவில் திருமலை வீட்டில் எதிரே மரப்பலகை மண்டி அருகே விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன். எனது கணவருக்கு எதிரே வந்த ஆம்புலன்ஸானது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஆம்புலன்ஸானது திருப்பத்தூரிலிருந்து நாட்றம்பள்ளி நோக்கி வந்தது என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் ஆனது சைரன் போட்டுக்கொண்டு அவசர நோயாளிகளை அழைத்துக் கொண்டு வந்தது என்றால் சரியல்ல. அதில் சைரன் எதுவும் இல்லை. எனது கணவர் தான் ரோட்டின் மையப்பகுதியை தாண்டி எதிரே வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் 1–ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டதாக அருதியாக சொல்ல முடியாது என்றால் சரியல்ல. எனது கணவரின் வருமானத்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் மாதம் ரூ.50,000/–த்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு மது பழக்கம் இல்லை. விபத்து சமயத்தில் எனது கணவர் ஹெல்மேட் அணியவில்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1–ம் எதிர்மனுதாரின் வாகனத்திற்கு காப்பீடும் அவரது ஓட்டுநருக்கு செல்லத்தக்க

உரிமம் இருந்தது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் தான் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்ட தெரியாமல் ஓட்டி வந்து 1–ம் எதிர்மனுதாரர் வானத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரர் எனக்கு எந்த நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**2–ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

விபத்து சமயத்தில் எனது கணவர் இருசக்கர வாகனம் ஓட்டிச்சொன்றால் என்றால் சரிதான். எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அது எப்படியோ தொலைந்துவிட்டது. எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமமே இல்லாத நிலையில் தொலைந்துவிட்டதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தலை காயத்தின் காரணமாக இறந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தலைக்கவசம் அணிந்து பயணித்திருந்தால் உயிர் அபாயத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. ஹெல்மேட் அணிந்திருந்தார். எனது கணவர் சரியான முறையில் பெல்ட் போட்டு தலைக்கவசம் அணிந்து பயணிக்காததால் தான் தலைக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு தான் அங்கு சென்று பார்த்தேன். விபத்தானது நாட்றம்பள்ளி – புதுப்பேட்டை ரோட்டில் தோழர் கவுண்டர் தெருவில் திருமலை வீட்டில் எதிரே மரப்பலகை மண்டி அருகே ஏற்பட்டது. அந்த தெரு மெயின் ரோடு என்றால் சரிதான். அந்த ரோடு இரண்டு வாகனங்கள் செல்லக்கூடியது என்றால் சரிதான். விபத்து நடந்த போது மாலை 6 மணி இருக்கும். எதிரில் வரும் வாகனத்தை கவனித்து ஓதுங்கி சென்றிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. விபத்தானது முழுக்க முழுக்க எனது கணவரின் அஜாக்கரதையால் ஏற்பட்டது என்றால்

சரியல்ல. காயம்பட்டவுடன் நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனையில் அட்மிட் ஆனார். நான் அங்கு சென்று பார்த்தேன் என்றால் சரிதான். அங்கிருந்து கிருஷ்ணகிரி அரசு மருத்துமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த Referral Slip யை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதில் எனது கணவர் மது அருந்தியதாக சொல்லப்பட்டிருந்ததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் மது அருந்திவிட்டு தாருமாறாக வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் சென்டரிங் வேலை செய்து வந்தார். அவர் மாதம் ரூ.50,000/–த்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கான கூலி வழங்கிய ரசீது உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். கூலி வழங்கியத்திற்கு பின்னிட்டு ரூ.40,000/– மிஞ்சும் என்பதை காட்டும் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனது கணவர் வருமான வரி எதும் செலுத்தவில்லை. நான் தாக்கல் செய்துள்ள கார் வாடகை ரசீதுகள் வழக்கிற்காக வேண்டி தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவரின் உடலை அடக்கம் செய்வதற்காக ரூ.50,000/– செலவானதைக் காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் கல்லூரியில் படித்து வருகிறார். ஆனால் திருமணம் ஆகவில்லை. எனது மகளுக்கு 18 வயது பூர்த்தியாகிவிட்டது என்றால் சரிதான். எனது கணவர் இறக்கும்போது வயது 55 என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல. விபத்து எனது கணவரின் கவனக்குறைவால் ஏற்படாததால் எதிர்மனுதாரர்கள் எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டர் அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.